


மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றதில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான பல்வேறு ஆலோசனைகள் வழங்கி கழக மண்டல பொறுப்பாளர், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரையாற்றினார். உடன் உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ம.ஜெயராம், மாநில தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன், மாவட்ட நிர்வாகிகள் மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், பி.டி.மணிமாறன், வைகை பரமன், பகுதி செயலாளர் அறிவு நிதி, வட்டச் செயலாளர் செல்வராஜ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.




மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் 5968 பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. முன்னிலையில் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில்

# ‘கலைமாமணி விருதுகள்’ - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

## சென்னை கலைவாணர் அரங்கில் இன்று விழா!

சென்னை, அக்.10-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை 2021, 2022, 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் மற்றும் சிறப்பு விருதுகளையும் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா இன்று (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று விருதுகள் வழங்கி, மலர் வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் 2021, 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதும், சிறப்பு விருதுகளாக பாரதியார் (இயல்) விருது முனைவர் ந.முருகேச பாண்டியன் அவர்களுக்கும், எம்.எஸ்.சுப்புலட்சுமி (இசை) விருது பத்ம விபூஷண் டாக்டர் கே.ஜே.யேசுதாஸ் அவர்களுக்கும், பால சரஸ்வதி (நாட்டியம்) விருது பத்மஸ்ரீ முத்து கண்ணம்மாள் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இவ்விழாவில் அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாலை 4 மணிக்கு “உருபாணர்” இசைக் குழுவினரின் யாழ் இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி கமுதி ஊராட்சி ஒன்றியம் கமுதியில் தொழிற்பயிற்சி பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை தமிழ்நாடு வனம் மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் ஆய்வு மேற்கொண்டார்.

# சமூக விஷத்தின் அடையாளம் ஆர்.எஸ்.எஸ்- பா.ஜ.க.!

## ராகுல் காந்தி கடும் விமர்சனம்!

ஹரியானா, அக்.11-

சமூக விஷத்தின் அடையாளம் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. என, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஹரியானா மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி புரன்குமார், துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம், ஒட்டுமொத்த காவல்துறை வட்டாரத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.



ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த துயரமான சம்பவம், சாதிய பாகுபாட்டில் சமூகம் மோசமான நிலையில் இருப்பதை எதிரொலிப்பதாக வேதனை தெரிவித்துள்ளார். ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை, சாதிய அடிப்படையில் மனிதாபிமானம் நசுக்கப்பட்டு, ஆழமடைந்து வரும் சமூகத்தின் விஷத்தின் அடையாளம் என ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

மேலும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீதான தாக்குதல் குறித்தும் குறிப்பிட்டுள்ள அவர், இது போன்ற சம்பவங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருவதையே காட்டுவதாகவும், பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ் வெறுப்புணர்ச்சியை விதைத்து, மனுதர்மத்தை விஷத் தன்மையுடன் சமூகத்தில் பரப்பி வருவதாகவும் காட்டமாக விமர்சித்துள்ளார்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் – இன்று

# திருவாரூரில் மாபெரும் கருத்தரங்கம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

## அணியின் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, அக்.11-

கழக சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு சார்பில் இன்று திரு வாரூரில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெறுகிறது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் மற்றும் பலர் சிறப்புரையாற்று கின்றனர் என்று கழக சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அன்றும்!. இன்றும்! என்றும்! சிறுபான்மை யின மக்களின் காப்பான் தி.மு.க. எனும் தலைப்பில் இன்று (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சொந்த ஊரான திருவா ரூரில் உள்ள பொன்தமிழ் திருமண மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன். எம்.எல்.ஏ. சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர், தமிழ்நாடு சிறுபான்மை யினர் நல வாரியத் தலைவர் அருட்தந்தை ஜோ. அருண், வாரியத் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர் நவாஸ்கனி எம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில தலைவர், துணைத் தலைவர், இணைச் செயலாளர், மாநில துணைச் செயலாளர்கள், திருவாரூர், தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு,

தஞ்சை மத்திய மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் கழக மாவட்டங்களை உள்ளடக்கிய சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாநகரம், ஒன்றியம், நகரம்,பகுதி மற்றும் பேரூர் கழக நிர்வாகி களுடன் இஸ்லாமிய, கிறிஸ்துவ, புத்தம், ஜைனம் மற்றும் பல சிறுபான்மை யின அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி குலசேகரபுரம் பகுதியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ. கீதா ஜீவன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், கி.ராதா கிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ், மாணவரணி ஆகாஷ் பாண்டியன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

